சுருக்கம்

பணியமைப்பு – மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் – இருக்கைப் பணி கண்காணிப்பாளர் / உதவியாளர் பணியிடத்தை உதவியாளர் பணியிடமாக நிலை நிறுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (ஆர்.2) துறை

அரசாணை (நிலை) எண்.315

நாள் 27.12.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
மார்கழி 13
படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.188, பள்ளிக் கல்வித் துறை, நாள் 08.11.2001.
2. அரசாணை (நிலை) எண்.4, பள்ளிக் கல்வித் துறை, நாள் 10.01.2002.
3. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க. எண்.520/அ1/2012, நாள் 22.11.2012.

*******

ஆணை:-

மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககமானது பள்ளிக் கல்வி இயக்ககத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி இயக்ககமாக பிரிக்கப்பட்ட போது, பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் முறைசாரா வயது வந்தோர் கல்வி இயக்ககத்திலிருந்து கீழ்க்கண்ட அமைச்சுப் பணியிடங்கள் பணியாளர்களுடன் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்கத்திற்கு மாற்றம் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | கண்காணிப்பாளர் | 2 பணியிடம் |
| 2. | நிலை உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் / உதவியாளர் | 8 பணியிடம் |
| | மொத்தம் | 10 பணியிடம் |

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரது கடிதத்தில், மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் அனுமதிக்கப்பட்ட அமைச்சுப் பணியாளர் பணியிடங்களில் 5 பணியிடங்கள் நீண்ட நாட்களாக காலிப்பணியிடமாக இருந்தது என்றும், எஞ்சிய 5 பணியிடங்களில் 2 கண்காணிப்பாளரும் 2 பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளரும் 1 உதவியாளர் மட்டுமே பணிபுரிந்து வந்தனர் என்றும், இந்நிலையில், இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளின்படி பணி மாறுதலில் 21.06.2012 முதல் உதவியாளர் நிலையில் பணியாளர் நியமிக்கப்பட்டுள்ளார்